A1C/59171

நினைவூட்டல் - 3

# அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

H/SCH/2019

தேதி: 12-11-2019

## சுற்றறிக்கை

**பொருள்:** ஆதிதிராவிட பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிட மாணவ/மாணவியர்கள் 2019-2020 ஆம் கல்வி ஆண்டு போஸ்ட் மெட்ரிக் ஸ்காலர்ஷிப் மற்றும் உயர்கல்வி சிறப்பு கல்வி உதவித்தொகை - பெறுவதற்குறிய விண்ணப்பங்களை சமர்ப்பிப்பது தொடர்பாக.

**பார்வை:** சுற்றறிக்கை - 1, நாள்: 22.07.2019

சுற்றறிக்கை - 2, நாள் 29.08.2019

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 2019-2020 ஆம் கல்வி ஆண்டு முதல் பல்வேறு துறைகளில் கல்வி பயிலும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறிஸ்துவஆதிதிராவிடர் SC/ST/SCC வகுப்பைச் சேர்ந்த முதலாமாண்டு மற்றும் புதுப்பித்தல் (Renewal) மாணவ/மாணவியர்கள் கல்வி உதவித்தொகை பெற வேண்டி பூர்த்தி செய்யப்படட விண்ணப்பங்களை உடனடியாக 'H' பிரிவிற்கு சமர்ப்பிக்குமாறு கோரப்படுகிறது.

மேலும், முழுநேர முனைவர் பட்டப்படிப்பை பயிலும் மாணாக்கர்கள் கல்வி உதவித்தொகை பெற விண்ணப்பங்கள் **(Postmatric Scholaship)** சமர்ப்பிக்கவில்லை. சில மாணவர்கள் விண்ணப்பித்துள்ளனர். **விண்ணப்பிக்காத மாணவர்கள்** விண்ணப்பங்களைப் பெற்று உடனடியாக 'H' பிரிவை தொடர்பு கொண்டு விண்ணப்பத்தை **29.11.2019 க்குள்** சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஆதிதிராவிட நலத்துறை வழங்கியுள்ள படிவத்தின் நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. அந்த படிவத்தினை விடுதி மூலமாக பெற்று பூர்த்தி செய்து விடுதி அலுவலகத்தில் சமர்ப்பிக்கவும். மேலும் விடுதியில் உள்ள **உயர்கல்வி சிறப்பு உதவித்தொகை தொடர்பான அலுவலர்கள்,** மாணாக்கர்களிடம் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை பெற்று விண்ணப்பத்தில் உள்ள தகவல்களை XL-ல் ஆங்கிலத்தில் **'Times New Roman'** எழுத்தை பயன்படுத்தி கணினி மூலம் தயார் செய்வதுடன் **(Pen Drive-ல் காப்பி செய்து) annamalaischolar@gmail.com** என்ற மின்னஞ்சல் மூலமும் 'H' பிரிவில் சமர்ப்பிக்க ஆவண செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டு இச்சுற்றறிக்கையை இறுதி வாய்ப்பாக கருதி **29.11.2019-க்குள்** சம்மந்தப்பட்ட விடுதி அலுவலர்கள் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள கேட்டுககொள்ளப்படுகிறது.

ஆர். ஞானதேவன் (கையொப்பம்) 12/11/19

பதிவாளர் (பொ) 3/3

பெறுதல்

1. அனைத்து புல முதல்வர்கள்
2. அனைத்து துறை தலைவர்கள்
   (இச்சுற்றறிக்கையினை அனைத்து மாணவ/மாணவியர்களுக்கும் வகுப்புகளில் தெரிவிக்க கோரப்படுகிறது)
3. விடுதி ஒருங்கிணைப்பாளர்.
4. அனைத்து விடுதி காப்பாளர்கள்
5. சுற்றறிக்கையை அறிவிப்பு பலகை வாயிலாக மாணவ/மாணவியர்களுக்கு தெரிவிக்க வலியுறுத்தப்படுகிறது.

நகல்

1. துணைவேந்தரின் நேர்முக உதவியாளர்.
2. பதிவாளரின் நேர்முக உதவியாளர்
3. அலுவலகக் கோப்பு